**OS. No. 2 /2019**

P.W.1 - பழனி

தேதி: 17.12.2020.

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

15.04.2013 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தில் கட்டிடத்தை நான் கட்டி தருவதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கட்டிடம் கட்டுவதற்கான செலவை பிரதிவாதிகள் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் பணம் கொடுத்தால் நான் கட்டிடம் கட்டிக்கொடுக்கவேண்டும். இதே சங்கதியை தான் வாலாஜா முனிசீப் நீதிமன்றத்தில் ஓ எஸ் நம்பர் 7/2018ல் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது **பி.சா.ஆ.1.** பிரதிவாதிகளிடம் பணம் வாங்கி தான் கட்டிடம் கட்டி தாவா சொத்தை வாடகைக்கு விட்டு இருக்கிறேன். இதே நீதிமன்றத்தில் 02.12.2020 அன்று என்னை விசாரிக்கும் போது என்னுடைய குறுக்கு விசாரணையில் நான் தான் கட்டிடம் கட்டிக்கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டிடம் அனைத்துமே பிரதிவாதிகள் தான் சுமார் ரூ.56,37,760/=க்கு கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றும் அதற்குண்டான மெட்டிரீயல் அக்ரிமெண்ட் மணி மேஸ்திரி மூலம் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. கட்டிடத்தை நான் தான் கட்டினேன். அதற்குண்டான மெட்டிரீயல் அக்ரிமெண்ட்டை நான் யாரிடமும் போடவில்லை. நான் நீதிமன்றத்தில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனடிப்படையில் நான் இதச 199, 200 பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய நபர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 3

கடைகளை பிரதிவாதிகள் வாடகை விட்டுள்ளார்கள் என்பதை காட்ட புகைப்படங்களை தாக்கல் செய்யவில்லை. அவர்கள் 3ம் நபருடன் போட்டுள்ள ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு ஒப்பந்தம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் என் மீது வாலாஜா மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ எஸ் நம்பர் 7/2018ல் தாக்கல்செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் அவர்களை சட்ட விரோதமாக காலி செய்யக்கூடாது என்று தான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அதில் அவர்கள் பெற்ற உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2.** தாவா சொத்தில் 3பேஸ் மின் இணைப்பு உள்ளது. அதற்குண்டான டெபாசிட் தொகையை நான் தான் செலுத்தினேன். அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. மின் கட்டண டெபாசிட் தொகை முழுவதையும் பிரதிவாதிகள் தான் செலுத்தியுள்ளார்கள் என்றும் அதன் உண்மை நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றும் சொன்னால் சரிதான். அது **பி.சா.ஆ.3.** பிரதிவாதி வாடகை பாக்கி வைத்திருப்பதாக சொல்லி நான் வழக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதிகளை காலி செய்ய சொல்லி எவிக்ஷன் நோட்டிஸ் கொடுக்கவில்லை. அவை யாவும் தெரியாமல் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வாடகை ஒப்பந்த காலம் 15 வருடம் இருக்கிறது என்றும் பிரதிவாதிகள் வாடகை தொகையினை தவறுதல் ஏதுமின்றி சரியாக தான் என்னிடம் செலுத்தி வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகள் வாடகை பாக்கி எதுவும் வைத்திருக்கவில்லை என்றும் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அ.இ.அ.தி.மு.க=வில் கிளை செயலாளராக பொறுப்பில் இருக்கிறேன். என் மனைவியான 2ம் வாதி

தென்கடப்பந்தாங்கல் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அரசியல் பலமும், ஆள்பலமும் இருக்கின்ற காரணத்தால் தான் திருநெல்வேலியிலிருந்து வந்த பிரதிவாதிகளை ஆள் வைத்து தாவா சொத்தில் இருந்து காலி செய்வதற்காக முயற்சி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கட்டிடம் கட்டிய மணி மேஸ்திரியை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்று சொன்னால் அப்படிப்பட்ட மணி மேஸ்திரி என்ற ஆளை யார் என்று எனக்கு தெரியாது. 2015 ம் ஆண்டில் நான் பிரதிவாதியிடம் மாத வாடகை ரூ.20,000/=ம் வாங்கினேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் இன்று வரை பிரதிவாதிகளிடம் மாதவாடகை ரூ.22,000/= வாங்கி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தின் படி 2018 வரை மாத வாடகை ரூ.22,000/= வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**